உ
சிவாய நம:

ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதர்கள் அருளிய

॥ श्री मीनाक्षी स्तोत्रम् ॥

॥ ஸ்ரீ மீனாக்ஷீ ஸ்தோத்ரம் ॥

தமிழ் உரை:
ஞானபாஸ்கர, சிவோத்கர்ஷவர்ஷக
பிரம்மஸ்ரீ **P.N. நாராயண சாஸ்திரிகள்**

श्रीविद्ये शिववामभागनिलये श्रीराजराजार्चिते
श्रीनाथादिगुरुस्वरूपविभवे चिन्तामणीपीठिके ।
श्रीवाणी गिरिजानुताङ्घ्रिकमले श्रीशांभवी श्रीशिवे
मध्याह्ने मलयध्वजाधिपसुते मां पाहि मीनाम्बिके ॥ १

ஸ்ரீவித்^{3}யே ஶிவவாமபா^{4}க^{3}நிலயே ஸ்ரீராஜராஜார்சிதே
ஸ்ரீநாதா^{2}தி^{3}கு^{3}ருஸ்வரூபவிப^{4}வே சிந்தாமணீபீடி^{2}கே ।
ஸ்ரீவாணீ கி^{3}ரிஜானுதாங்க்^{4}ரிகமலே ஸ்ரீஶாம்ப^{4}வீ ஸ்ரீஶிவே
மத்^{4}யாஹ்னே மலயத்^{4}வஜாதி^{4}பஸுதே மாம் பாஹி மீனாம்பி^{3}கே ॥ 1

1. ஸ்ரீ வித்யை என்னும் மஹாமந்திரத்தின் வடிவானவளே சிவனின் இடப்பாகத்தை இருப்பிடமாய்க் கொண்டவளே, ராஜ ராஜர்களாலும் பூஜிக்கப்பட்டவளே, ஸ்ரீநாதர் என்கிற திருமால் முதலான உபாஸகரின் மூன்று தலைமுறை வரையிலுள்ள குருமண்டலத்தின் வடிவானவளே, ஸ்ரீநகரம் என்னும் ராஜ்யத்தில் சிந்தாமணி எனப்பெயர் பெற்ற அரண்மனையில் ஸிப்பவளே, ஸ்ரஸ்வதி லக்ஷ்மியால் தொழப்பட்ட திருவடித் தாமரைகளை உடையவளே, சம்புவின் பத்திநியான சாம்பவியே, மங்களமானவளே, நடுப்பகல் உருவானவளே, பாண்டிய நாட்டின் சக்ரவர்த்தியான மலயத்வஜ பாண்டியனின் மகளான மீனாக்ஷித்தாயே, என்னைக் காப்பாயாக.

चक्रस्थेऽचपले चराचरजगन्नाथे जगत्पूजिते
आर्तालीवरदे नवाभयकरे वक्षोजभारान्विते ।
विद्ये वेदकलापमौलिविदिते विद्युल्लताविग्रहे
मातः पूर्णसुधारसार्द्रहृदये मां पाहि मीनाम्बिके ॥ २

சக்ரஸ்தே²(அ)சபலே சராசரஜக³ந்நாதே² ஜக³த்பூஜிதே
ஆர்தாலீவரதே³ நவாப⁴யகரே வக்ஷோஜபா⁴ரான்விதே ।
வித்³யே வேத³கலாபமௌலிவிதி³தே வித்³யுல்லதாவிக்³ரஹே
மாத: பூர்ணஸுதா⁴ரஸார்த்³ரஹ்ருத³யே மாம் பாஹி மீனாம்பி³கே ॥ 2

2. சக்ர ராஜம் எனப்படும் ஸ்ரீ சக்ரத்தில் இருப்பவளே, அசைவற்றவளே, அசைவதும் அசையாததுமான உலகிற்குத் தலைவியே, உலகினால் பூஜிக்கப்பட்டவளே, துயரத்தில் பீடிக்கப்பட்ட பக்தர்களுக்கருள்பவளே, வணங்கியவர்களின் பயத்தைப் போக்கடிப்பவளே, பருமனான தனபாரங்களை உடையவளே, வித்தையின் உருவானவளே, வேதக்கூட்டங்களின் முடிவினால் அறியத்தக்க பரம் பொருளே, மின்னற் கொடிபோன்ற உருவத்தை உடையவளே, நிறைந்த அமிர்தத்தினால் நனைந்த உள்ளத்தை உடையவளே, தாயே, மீனாம்பிகையே என்னைக் காப்பாயாக.

.

குறிப்பு: -

-वेदकलापमौळिविदिते-अनन्ताये वेदा:-

-வேத³கலாபமௌளிவிதி³தே-அனந்தாயே வேதா³:-
வேதங்கள் முடிவற்றவை

सैषात्रययेव विद्याऽतपति-

ஸைஷாத்ரயயேவ வித்³யா(அ)தபதி-
"தத்பதவாச்யமான இந்த அம்பிகையே மறைகளின் முடிவில் கூறப்படும் பிரும்ம - வித்யை, எல்லாவற்றையும் தெளிவுபெறச் செய்கிறவள்."

गायत्रीच्छन्दसां माता-

கா³யத்ரீச்ச²ந்த³ஸாம் மாதா-
"வேதத்திற்குத்தாயான காயத்ரீ தேவி" இம்மாதிரி பல யஜுர்வேத வாக்யங்கள், வேத முடிவின் பொருள் அம்பிகையே என ஐயந்திரிபுக்கிடமில்லாமல் கூறுகிறது.

कोटीराङ्गदरत्नकुण्डलधरे कोदण्डबाणाञ्चिते
कोका कारकुचद्वयोपरिलसत्प्रालम्बिहाराञ्चिते ।
शिञ्जन्नुपुर पादसारसमणि श्रीपादुकालंकृते
मद्दारिद्र्य भुजङ्गगारुडखगे मां पाहि मीनांबिके ॥ ३

கோடீராங்க3த3ரத்னகுண்ட3லத4ரே கோத3ண்ட3பா3ணாஞ்சிதே
கோகா காரகுசத்3வயோபரிலஸத்ப்ராலம்பி3ஹாராஞ்சிதே ।
ஶிஞ்ஜன்னுபுர பாத3ஸாரஸமணி ஸ்ரீபாது3காலங்க்ருதே
மத்3தா3ரித்3ர்ய பு4ஜங்க3கா3ருட3க2கே3 மாம் பாஹி மீனாம்பி3கே ॥ 3

3. கிரீடம் தோள்வளைகள், ரத்தினத்தினாலான குண்டலங்களை யணிந்தவளே, கரும்பு வில்லையும் மலர் வாளியையுங் கொண்டவளே, தாமரை மொட்டு போன்ற இரண்டு தனங்களின் மேல் விழுந்து தொங்குகிற மாலைகளை உடையவளே, ஒலிக்கிற கொலுஸுகளை அணிந்த திருவடிகளை உடையவளே என்னிடமுள்ள வறுமை என்கிற பாம்பை நாசம் செய்யும் கருடன் போன்றவளே, மீனாக்ஷித்தாயே என்னைக் காப்பாயாக.

ब्रह्मेशाच्युतगीयमान चरिते प्रेतासनान्तः स्थिते
पाशोदङ्कुशचापबाणकलिते बालेन्दुचूडाञ्चिते ।
बाले बालकुरङ्गलोलनयने बालार्ककोट्युज्ज्वले
मुद्राराधितदैवते मुनिनुते मां पाहि मीनांबिके ॥ ४

ப்3ரஹ்மேஶாச்யுதகீ3யமான சரிதே ப்ரேதாஸனாந்த: ஸ்தி2தே
பாஶோத3ங்குஶசாபபா3ணகலிதே பா3லேந்து3சூடா3ஞ்சிதே ।
பா3லே பா3லகுரங்க3லோலநயனே பா3லார்ககோட்யுஜ்ஜ்வலே
முத்3ராராதி4தைதை3வதே முனினுதே மாம் பாஹி மீனாம்பி3கே ॥ 4

4. நான்முகன் திருமால் இவர்களால் பாடப்பட்ட சரித்திரத்தை உடையவளே, பிரும்மா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன், இவர்களைக் கால்களாயும் ஸதாசிவனைப் பலகையாயும் கொண்ட "பஞ்சப்ரேதாஸநம்" என்னும் கட்டிலில் அமர்ந்தவளே, பாசம், அங்குசம், வில், பாணம், இவைகளை நான்கு கைகளில் கொண்டவளே, இளம்பிறைச் சந்திரனை முடியில் கொண்டவளே, பாலையின் உருவானவளே, மான் குட்டிபோன்ற இரண்டு விழிகளை உடையவளே, அப்பொழுது உதித்த கோடிக்கண க்கான சூரியர்களின் ஒளி போன்றவளே, 10 முத்திரைகளால் பூஜிக்கப் பட்டவளே, முனிவர்களால் துதிக்கப்பட்டவளே, மீனாக்ஷித்தாயே, என்னைக் காப்பாயாக.

குறிப்பு: - முத்திரைகள். 10.

1. ஸர்வம் க்ஷோபிணி
2. ஸர்வித்ராவிணீ
3. ஸர்வாகர்ஷிணீ
4. ஸர்வவசங்கரீ
5. ஸர்வோன்மாதிநீ
6. ஸர்வமஹாங்குசா
7. ஸர்வகேசரீ
8. ஸர்வபீஜா
9. ஸர்வயோநி
10. ஸர்வத்ரிகண்டா

முநினுதே: - அகஸ்தியர், துர்வாஸர், பரசுராமர், கௌதமர், வஸிஷ்டர், விச்வாமித்ரர் ஆகிய முநிவகளால் துதிக்கப்பட்டவள்.

गन्धर्वा मरयक्ष पन्नगनुते गङ्गाधरालिङ्गिते
गायत्रीगरुडासने कमलजे सुश्यामले सुस्थिते ।
खातीते खलदारुपावकशिखे खद्योतकोट्युज्ज्वले
मन्त्राराधितदैवते मुनिनुते मां पाहि मीनाम्बिके ॥ ५

க3ந்த4ர்வா மரயக்ஷ பன்னக3னுதே க3ங்கா3த4ராலிங்கி3தே
கா3யத்ரீக3ருடா3ஸனே கமலஜே ஸுஶ்யாமலே ஸுஸ்தி2தே ।
கா2தீதே க2லதா3ருபாவகஶிகே2 க2த்3யோதகோட்யுஜ்ஜ்வலே
மந்த்ராராதி4ததை3வதே முனினுதே மாம் பாஹி மீனாம்பி3கே ॥ 5

5. கந்தர்வர்கள், தேவர்கள், யக்ஷர்கள், பாம்புகள் ஆகியோர்களால் துதிக்கப் பட்டவளே, கங்கையை முடியில் கொண்ட சிவனால் தழுவிக் கொள்ளப்பட்டவளே, காயத்ரீ யானவளே, கருடனை வாகனமாய்க் கொண்ட வைஷ்ணவியானவளே, தாமரையில் உண்டானவளே, சியாமளையாய் நிலைபெற்றிருப்பவளே புலன்களுக்கு மேற்பட்டவளே, துஷ்டர்களாகிய மரங்களடர்ந்த காட்டிற்கு நெருப்பு பிழம்பானவளே, கோடிக்கணக்கான நக்ஷத்ரங்கள் போல் ஒளிவீசுபவளே, ஸ்ரீ வித்யை முதலிய மந்திர ங்களால் ஆராதிக்கப்பட்ட தேவதையே. முனிவர்களால் துதிக்கப்பட்ட மீனாக்ஷித் தாயே என்னைக்காப்பாயாக.

नादे नारदतुम्बुराद्यविनुते नादान्तनादात्मिके
नित्ये नीललतात्मिके निरुपमे नीवारशूकोपमे ।
कान्ते कामकले कदम्बनिलये कामेश्वराङ्कस्थिते
मद्विद्ये मदभीष्टकल्पलतिके मां पाहि मीनांबिके ॥ ६

நாதே3 நாரத3தும்பு3ராத்3யவினுதே நாதா3ந்தநாதா3த்மிகே
நித்யே நீலலதாத்மிகே நிருபமே நீவாரஶூகோபமே ।
காந்தே காமகலே கத3ம்ப3நிலயே காமேஶ்வராங்கஸ்தி2தே
மத்3வித்3யே மத3பீ4ஷ்டகல்பலதிகே மாம் பாஹி மீனாம்பி3கே ॥ 6

6. ஸங்கீதத்தில் பிரியமுள்ளவளே நாரதர், தும்புரு முதலியவர்களால் துதிக்கப்பட்டவளே, பிரும்மரந்திரத்தில் குண்டலிநீ சக்தி சேர்ந்ததால் உண்டாகும். முக்தி நிலையைக் காட்டும் அம்ருதமயமான ஒளிவடிவானவளே. எப்பொழுது முள்ள வளே, நீலோத்பலக் கொடி போன்றவளே, உவமை யற்றவளே, செந்நெற் கதிர் போன்ற ஒளியுள்ளவளே மிக அழகானவளே, காம்கலையானவளே, கடம்ப மரக்காட்டில் திகழ்பவளே, காமேச்வரனின் மடியில் வீற்றிருப்பவளே, என் தெய் வமே என் இஷ்டத்தைக் கொடுக்கும் கல்பமரம் போன்றவளே மீனாக்ஷித்தாயே என்னைக் காப்பாயாக.

குறிப்பு: - नादान्तम् நாதா3ந்தம் பிரும்மரந்திரம் மூலாதாரத்திலிருக்கும் குண்டலிநி சக்தியை யோக பலத்தில் எழுப்பி 6 சக்ரங்களையும் தாண்டச் செய்து ஆயிரம் இதழ்

தாமரை போன்ற பிரும் மரந்திரத்தை அடையச் செய்து அம்ருததாரைகள் சரீரம் முழுதும் விழுந்து நீண்ட ஆயுளோடு ஜீவன் முக்தனாய் விளங்குவான். அந்த சக்தி அம்பிகையே என்பது கருத்து

कामो योनिः कामकला- காமோ யோனிঃ காமகலா-

புவநேச்வரீ பீஜமாகிய ஹ்ரீம் எனும் எழுத்தில் கடைசியில் ஒலிக்கும் "ஈம்" எழுத்திற்கு காமகலை என்று பெயர் அது அம்பிகையின் வடிவானது அதை ஜபிப்பவன் அருளை அடைகிறான். ஆகவே ஏகாக்ஷர மந்திரம் மிக மிக உயர்ந்தது.

वीणानादनिमीलितार्थनयने विस्रस्तचूलीभरे
ताम्बूलारुण पल्लवाधरयुते ताटङ्कहारान्विते ।
श्यामे चन्द्रकलावतंसकलिते कस्तूरिका फालिके
पूर्णे पूर्णकला भिरामवदने मां पाहि मीनाम्बिके ॥ ७

வீணாநாத³னிமீலிதார்த²நயனே விஸ்ரஸ்ததூலீப⁴ரே
தாம்பூ³லாருண பல்லவாத⁴ரயுதே தாடங்கஹாரான்விதே ।
ஶ்யாமே சந்த்³ரகலாவதம்ஸகலிதே கஸ்தூரிகா பா²லிகே
பூர்ணே பூர்ணகலா பி⁴ராமவத³னே மாம் பாஹி மீனாம்பி³கே ॥ 7

7. ஸரஸ்வதிதேவி அம்பிகையின் ஸந்நிதியில் இனிமையாய் வீணைவாசிப்ப தைக் கேட்டு அரைக் கண்ணை மூடிக் கொண்டு ரஸிப்பவளே! ஈரம் காய்வதற்காக அவிழ்த்து விடப்பட்ட தலைமுடியை உடையவளே தாம்பூலம் போட்டுக் கொண்டதி னால் சிவந்திருக்கும் உதடுகளை உடையவளே காதில் தோடும் மார்பில் மாலைகளும் அணிந்தவளே, அழகானவளே, பிறைச்சந்திரனை முடியில் தரித்தவளே, கஸ்தூரிப் பொட்டுடன் கூடிய நெற்றியையுடையவளே ஸகல, சௌபாக்கியங்களும் நிறைந்த வளே, நிறைமதி மண்டலம் போன்ற முகத்தையுடையவளே, மீனாக்ஷித்தாயே, என்னைக் காப்பாயாக.

शब्दब्रह्ममयी चराचरमयी ज्योतिर्मयी वाङ्मयी
नित्यानन्दमयी निरञ्जनमयी तत्वंमयीचिन्मयी ।
तत्वातीतमयी परात्परमयी मायामयी श्रीमयी
सर्वैश्वर्यमयी सदाशिवमयी मां पाहि मीनाम्बिके ॥ ८

ஶப்³த³ப்³ரஹ்மமயீ சராசரமயீ ஜ்யோதிர்மயீ வாங்மயீ
நித்யானந்த³மயீ நிரஞ்ஜனமயீ தத்வம்மயீசின்மயீ ।
தத்வாதீதமயீ பராத்பரமயீ மாயாமயீ ஸ்ரீமயீ
ஸர்வைஶ்வர்யமயீ ஸதா³ஶிவமயீ மாம் பாஹி மீனாம்பி³கே ॥ 8

8. மறையில் நிறைந்தவளும் அசைவதும் அசையாததுமான உலகத்தில் உறைபளும் ஒளிவடிவானவளும், வார்த்தைகளின் வடிவானவளும், எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருப்பவளும் ஒட்டுதலற்றவளும் அத்விதீய பிரும்மமானவளும்

அறிவுமயமானவளும் 25 தத்வங்களுக்கப்பாற்பட்டவளும் மேலானதிற்கும் மேலான வளும் மாயையானவளும் செல்வமானவளும் அழிவதும் அழியாததுமான செல்வத் துள் உறைபவளும் ஸதாசிவனிடம் இரண்டறக் கலந்தவளும் ஆன மீனாக்ஷித்தாயே என்னைக் காப்பாற்றுவாயாக.

குறிப்பு: - **शब्दब्रह्म् - ஶப்[3]த[3]ப்[3]ரஹ்மம்** - வேதம்

त्रोणिज्योतीं षिस्यतेसषोडशी த்ரோணிஜ்யோதீம் ஷிஸ்யதேஸஷோட[3]ஶீ

3 வது அஷ்டகம் யஜுர்வேதம் ஜோதிர் வடிவான மூன்று பிரிவுகளைக் கொண்ட அம்பிகையின் மந்திரமே மஹா ஷோடசி யென்பது. ஜோதிர்மயீ என்பதில் இந்த பொருளே கிடைக்கிறது.

वाङ्मयी-वागक्षरं प्रथमजा श्रतस्य வாங்மயீ-வாக[3]க்ஷரம் ப்ரத[2]மஜா ஶ்ரதஸ்ய

2 வது அஷ்டகம் யஜுர் வேதம். உண்மையாய் முதலில் உண்டான அக்ஷரம் அம்பிகையே என இந்த வேத வாக்யம் கூறுகிறது.

तस्याउपोत्थाय.... தஸ்யாஉபோத்தா[2]ய....

யஜுர் வேதம் 7 வது காண்டம் இங்கு அம்பிகையின் பல உருவங்கள் இடா, நந்தி, அதிதி, ஸரஸ்வதி, ப்ரியா, ப்ரேயஸி, இவைகள் முதலியன உன் பெயர்கள் என அம்பிகையைப் பார்த்து வேதம் கூறுகிறது.

तत्वं बिभृहि - தத்வம் பி[3]ப்[4]ருஹி - "அந்த ப்ரும்மம் நீயாக இருக்கிறாய்"

யஜுர் வேதம் 1 வது காண்டம் -

सर्ववेदायत्रैकंभवन्ति - ஸர்வவேதா[3]யத்ரைகம்ப[4]வந்தி -

எல்லா வேதங்களும் எந்த உன்னையே கூறுகிதோ பல அரிய, வேதம், வேதாந்தம், இதிஹாஸ புராண, சாஸ்திரங்களின் கருத்துக்களைக் கொண்டு ஸ்ரீமத் ஆசார்யாள் இந்த மீனாக்ஷி துதியை இயற்றி உள்ளார்கள். விரிவஞ்சி விளக்கங்கள் முழுவதும் சொல்லவில்லை. இந்தத்துதி வேத மயமானது. இதைப்படித்து வேதாத்யயனம் செய்த பயனைப்பெற்று அம்பிகையின் அருளை எல்லோரும் பெற வேண்டுகிறேன்.

சுபம்